# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/26 - 2015 දෙසැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2015.12.29

*1947/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை தேசிய நோய்த்தடுப்புக் கொள்கை**

*இலங்கை தேசிய நோய்த்தடுப்புக் கொள்கை தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அது 2014, ஒற்றோபர் 16 இல் இருந்து அமுல்படுத்தப்படும். நீண்ட காலமாக நாட்டின் தேசிய தேவைப்பாடு ஒன்றாக இருந்த இந்த இந்தக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான எதிர்கால கொள்கை அமைப்பு மற்றும் செயற்திட்டம் என்பவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் மாகாண அதிகார சபைக்கும் வழங்கப்படும்.*

*அநுர ஜயவிக்கிரம ,*
*செயலாளர்,*
*சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு.*

*சுகாதார, போஷாக்கு, சுதேச வைத்தியத்துறை அமைச்சு,*
*இல. 385,*
*வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை,*
*கொழும்பு - 10,*
*2015, திசெம்பர் 23.*

*முன்னுரை*

*இலங்கையில் சமூக ஆரோக்கியத்துக்கு முக்கியமானதாக விளங்கும் தடுப்பு மருந்துகளால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து விடுபட்டு வியாதிகளற்ற நாடு ஒன்றாக இலங்கையை உருவாக்கும் நோக்குடன் நோய் தடுப்பு மருந்து வழங்க வேண்டிய அபாயம் இல்லாத அனைவருக்கும் தேவையான நோய் தடுப்பு மருந்து வழங்கப்படும் சேவைகளை வழங்குவதற்கான நிலையான சூழல் ஒன்றை உறுதி செய்யும் தேசிய நோக்கு தொடர்பான இலங்கை தேசிய நோய் தடுப்பு மருந்து வழங்கப்படும் கொள்கை அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மனித வள அபிவிருத்தி குறிக்காட்டி - 2014 அறிக்கையின்படி மனித வள அபிவிருத்தியில் இலங்கை கணிசமானளவு முன்னேற்றத்தைப் பெற்றுள்ளதுடன் ஆசியப் பிராந்தியத்தில் முதலாவது இடத்தையும் பிடித்துள்ளது. இந்த நாட்டின் சில சுகாதார காட்டிகள் உலகத்திலுள்ள நாடுகளுடன் ஒப்பீடு செய்யப்படக்கூடிய தரத்தில் உள்ளது. எல்லா சமூகத்தினரையும் குறிப்பாக குழந்தைகள் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக நாடு முழுவதும் பரந்தளவில்*

விஷ்தரிக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய நோய் தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தடுப்பு மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பு, வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்கல், உரிய வெப்பநிலையில் தடுப்பு மருந்துகளை வைத்திருப்பதற்கான சாத்தியப்பாடு உரிய நேரத்தில் சேவை முறைமைக்கமைய தடுப்பு மருந்துகளை வழங்குதல் மற்றும் நோய்களின் தாக்கம் அதன் பக்க விளைவுகள் என்பவற்றை கருத்தில் கொண்டு தடுப்பு மருந்துகளை அறிமுகப்படுத்தல், தடுப்பு மருந்துகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் செயற்திறனை ஏற்படுத்துதல் போன்ற பிரதான அம்சங்களில் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஏற்பாடுகளை செய்தல் என்பவற்றை நோக்காக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் நன்றாக நிறுவப்பட்ட சுகாதார சேவையை இலவசமாக எமது நாட்டு குடிமக்களுக்கு வழங்கப்படுவதேயாகும். இந்த தேசிய கொள்கை மேலும் விளைத்திறன் மிக்கதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கும் அதாவது அனைத்து அம்சங்களையும் எதிர்பார்க்கும் மட்டத்தில் தக்கவைப்பதற்கும் பொது சுகாதாரத் துறையின் இலவச நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படும் சேவையை வலுப்படுத்தும் அதேவேளை தனியார் துறையினால் வழங்கப்படும் சேவையின் தர நியமங்களையும் உறுதிப்படுத்துவதற்கான சரியான முறைமை ஒன்றை ஏற்படுத்துவதற்குமான வழிவகைகளை வழங்குகின்றது.

**தேசிய எதிர்ச்சக்தியளித்தல் கொள்கை**

***சுகாதார அமைச்சு***

தேசிய நோய் எதிரிப்புச் சக்தியளித்தல் கொள்கையானது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற அமைச்சரவையினால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

***பின்னணி*** :

சகல பிரஜைகளுக்குமான தடுப்பு மருந்தேற்றலை உறுதிப்படுத்தும் அதிகாரமும், பொறுப்பும் அரசாங்கங்களுக்கு உரித்தானது. இது தொடர்பில், உலகளாவிய ரீதியில் ஒப்பீட்டளவில் தன் ஆளுமைக்குட்பட்ட, நிலையான, பயனுள்ளதான தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இலங்கை தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் நாட்டில் தடுப்பு மருந்து மூலம் தடுக்கக்கூடிய முக்கியமான நோய்களைத்தடுக்க அமுல்படுத்தப்படுகின்றது. விரிவாக்கப்பட்ட நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் மற்றும் அதன் எல்லா தடுப்பு மருந்துகளினதும் உயர் அடைவு என்பன மூலம் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டமானது தடுப்பு மருந்து மூலம் தடுக்கக் கூடிய நோய்களின் நிகழ்வைக் குறைத்து சிறந்த பெறுபேறைக் காட்டியுள்ளது.

சிறப்பாக இயங்குகின்ற நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் பிரதான கூறுகளாவன : பாதுகாப்பான தரமான தடுப்பு மருந்துகள் கிடைக்கக்கூடிய தன்மை, திறமையான சேவை வழங்கல், தகுந்த வெப்ப நிலையில் தடுப்பு மருந்தை பேணுதல் (குளிர் சங்கிலி), முறையாக நேரத்திற்கு அவற்றை விநியோகித்தல் நோயெதிரப்பு சக்தியளித்தல் பாதுகாப்பை கண்காணித்தல், தடுப்பு மருந்து செயல்திறன் மற்றும் பாதுகாப்பு தொடர்பான புலனாய்வு, புதிய தடுப்பு மருந்துகளை அறிமுகம் செய்தற்காக தடுப்பு மருந்து மூலம் தடுக்கக்கூடிய நோய்களின் தாக்கம் பற்றிய மதிப்பீடு, பயிற்றப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், போதிய மூலதனம், கருத்துக்கோடலும், பயனுள்ள தொடர்பாடலும் மற்றும் திட்டமிடலும் முகாமைத்துவமும்.

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் அனைத்து கூறுகளும் உகந்ததாக இயங்கி அதன் இலக்குகளையும், நோக்கங்களையும் அடைவதை உறுதிப்படுத்துவதே நாட்டின் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் பிரதான நோக்கமாகும். மேலும் நொயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டமானது, நாட்டின் இது தொடர்பான கொள்கைகள், சுகாதாரத்திற்கான உரிமையை அங்கீகரித்தல், சமநிலை அடிப்படை சான்றுகள், பொது மற்றும் தனியார் கூட்டின் முக்கியத்துவம், பல்துறைசார் அணுகுமுறை மற்றும் அக்கறையுள்ள நீதிநெறிமுறை என்பவற்றை கருத்திற் கொண்டுள்ளது.

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம்

தேசிய நேயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் அனைத்து தடுப்பு மருந்துகளும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்களுக்கான தேசிய ஆலோசனை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நோயெதிர்ப்பு சக்தியளித்தல் அட்டவணைப்படி உள்ளன. இத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் தடுப்பு மருந்துகளின் நேரம், வகை என்பன நோயின் தாக்கம், பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை, செயலாக்க இலகுத்தன்மை மற்றும் இத்திட்டத்தின் நோக்கங்களை அடைதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகக்கூடிய அல்லது அதிக ஆபத்து உள்ள மக்களுக்கும் (நோயெதிரப்பு திறன் குறைவு, முதிரா சிசுக்கள், கர்ப்பம், தொழில்சார் நோய்களுக்கு ஆளாகக்கூடிய அபாயம் முதலியன) மற்றும் விசேட சந்தர்ப்பங்களின் போதும் (அனர்த்தத்திற்குப் பின்னரான தொற்றுநோய் பரவல், நோய் பரவல், பயணங்களின்போது நோய்களுக்கு ஆளாகும் அபாயம்) எதிர்ப்பு சக்தியளித்தல், இத்திட்டத்தின் அவசியமான அங்கமாகும். விசேட தடுப்பு மருந்துகள் அல்லது தடுப்பு மருந்து அட்டவணை என்பன நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகக்கூடியவர்களுக்கு தடுப்பு மருந்தினால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான செயற்பாட்டினைக்கொண்ட தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை செயல்படுத்தும் பொறுப்பு பல்வேறு பங்குதாரர்களால் பகிரப்படும். பங்குதாரர்களான தொற்றுநோய்களுக்கான தேசிய ஆலோசனைக்குழு, தொற்றுநோயியல் பிரிவு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை, குடும்ப சுகாதார பணியகம், சுகாதார கல்வி பணியகம், வைத்திய ஆராய்ச்சி நிலையம், கல்விப் பகுதி, தனியார் சுகாதார நிலையங்கள், வைத்திய தொழில்சார் அமைப்புகள், பல்கலைக்கழகங்கள்/வேறு கற்பித்தல் மற்றும் பயிற்சி நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் (WHO, UNICEF, GAVI போன்றவை) என்பன தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை அமுல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

இத்திட்டமானது தனது சேவையை மக்களுக்கு இலகுவாக அணுகக்கூடிய வகையில் பரவலான சேவை வழங்கல் நிலையங்களின் வலையமைப்பினூடாக வழங்குகின்றது. பெரும்பாலான மக்கள் தமது தடுப்பு மருந்தளித்தல் சேவைகளை இலவசமாக அரச வைத்திய சாலைகள் மற்றும் சிகிச்சா நிலையங்களிலிருந்து பெறுகின்றனர். கடந்த ஆண்டுகளில், குறிப்பாக நகர்பபுறங்களில், தனியார் துறையில் துப்பு மருந்தளித்தல் சேவையை பெற்றுக்கொள்ளல் படிப்படியாக விரிவடைந்துள்ளது. இலங்கை அரசாங்கம் அரசாங்க இலவச நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவையின நிலைத்து நிற்றலை உறுதிப்படுத்துவதோடு, வினைத்திறன்மிகு தடுப்பு மருந்தளித்தல் சேவை வழங்கலில் பொது மற்றும் தனியார் கூட்டின் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கின்றது. பொது மற்றும் தனியார் துறைகளில் பாதுகாப்பான, தரமான நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவையை வழங்க தகுந்த ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் அமைக்கப்படும்.

தொண்ணூறு வீதத்திற்குமதிகமான அரச நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் செலவீனத்தை இலங்கை அரசாங்கம் ஏற்கின்றது. இது நிதி தொடர்பான நிலைத்து நிற்றல் சாத்தியப்பாட்டுக்கு சிறந்த சான்றாகும். தற்போது WHO, GAVI, UNICEF, போன்ற முன்னணி சர்வதேச கொடையாளிகள் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குகின்றனர்.

எதிர்காலத்தில், புதிய தடுப்பு மருந்துகளை அறிமுகப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான தடுப்பு மருந்தேற்றல் தொழில்நுட்பங்கள் என்பன உள்ளடங்கலான நோயெதிர்ப்பு சக்தியளித்தல் வேலைத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அதிக நிதி தேவைப்படும்.

**நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின்நோக்கு**

தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய பொது சுகாதார முக்கியத்துவமுள்ள நோய்கள் இல்லாத ஒரு நாடாக இலங்கையை உருவாக்கல்.

**நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் பணிக்கூற்று**

நாட்டிலுள்ள தகுதியுள்ள சகல தனிநபருக்கும் நோயெதிர்ப்பு சக்தியளித்தலை வழங்கக்கூடிய சூழலை ஏற்படுத்துவதை உறுதி செய்தல்.

**நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் இலக்கு**

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் மற்றும் பிராந்திய/உலகளாவிய முன்மொழிவுளினுடனான வேலைத்திட்டம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும் நாட்டிற்கு பொருத்தமான தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து சகல பிரசைகளையும் பாதுகாத்தல்.

**குறிக்கோள்கள் :**

1. நிலையான நியாயமான முறையில் தரமான நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை கிடைக்கக்கூடியதையும் பெறுவதையும் உறுதி செய்தல்.

2. நிலையான நியாயமான முறையில் மக்களின் சுகாதார தேவைக்கு அமைய ஆற்றலுள்ள, பாதுகாப்பான தரமான தடுப்பு மருந்துகளைப் பாவிப்பதை உறுதி செய்வதன் மூலம் பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள் இல்லாத நாட்டை உருவாக்கல்.

3. தர்க்க ரீதியான, ஆதாரபூர்வமான புதிய தடுப்பு மருந்துகளை அறிமுகப்படுத்துவதை உறுதி செய்தல்.

4. அனைத்து சேவை வழங்குநர்களும் தேசிய நோயெதிர்ப்பு சக்கதியளித்தல் திட்டத்தை அமுல்படுத்துவதை நோயெதிர்ப்பு சக்தியளித்தல் துறையில் கண்காணிப்பு மதிப்பாய்வு, தகவல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி என்பவற்றின் மூலம் உறுதி செய்தல்.

5. தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் நிதி தொடர்பான நிலைத்து நிற்றலை உறுதி செய்தல்.

6. தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்திற்கான கருத்துக்கோடல், ஊக்குவிப்பு, விழிப்புணர்வு, பாதுகாப்பு, மற்றும் ஆதரவு என்பவற்றை உறுதி செய்தல்.

7. தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை சகல பங்குதார்கள் மற்றும் சேவை வழங்குநர்களை பயிற்றுவித்தல் அடங்கலான ஒழுங்குமுறைப்படி அமுல்படுத்தல்.

## குறிக்கோள்களை அடைவதற்கான உத்திகள்

### *குறிக்கோள் 1: நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகள்*

நிலையான, நியாயமான முறையில் தரமான நோயெதிரப்பு சக்தியளித்தல் சேவை கிடைக்கக்கூடியதையும், பெறுவதையும் உறுதி செய்தல்.

1.1 ஏற்புடைய மருத்துவ காரணங்களை தவிர்த்து, அனைத்து இலங்கை தனிநபரினதும் பொதுமக்களினதும் அவசியம் கருதி, குறிப்பிட்ட வயது எல்லையில், தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்ட தடுப்பு மருந்துகளை இலங்கையின் அனைத்து பிரஜைகளும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1.2 சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற சகல நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகளும் நியாயமானதாகவும், பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

1.3 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சகல நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகளும் தீவு முழுவதற்குமான சுகாதார சேவை வலைப்பின்னலினூடாக இலங்கை வாழ் சகலருக்கும் இலகுவாகக் கிடைக்கக்கூடியதாகவும், அடையக்கூடியதாகவும் இருக்கும்.

1.4 சுகாதார அமைச்சானது நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளினதும் பூரண தீர்மானமெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை தொழில்நுட்ப ரீதியில் அவ்வப்போது பரிசீலனை செய்தல் மற்றும் தகுந்த பரிந்துரைகளை வழங்கல் என்பன திட்ட முகாமையாளர் மற்றும் தொற்றுநோய்களுக்கான ஆலோசனைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

1.5 அனைத்து நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான செயற்பாடுகளும் சுகாதார அமைச்சில் பதியப்பட்ட, ஒப்புதல் பெற்ற நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். சுகாதார அமைச்சு, அனைத்து நிலையங்களிலும் சிறந்த சேவையை வழங்க, குறைந்தபட்ச வசதிகள் இருப்பதை உறுதி செய்யும்.

1.6 அனைத்து தனியார் தடுப்பு மருந்து வழங்கல் நிலையங்களும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) சட்டம்/தனியார் சுகாதார சேவை ஒழுங்காக்கல் சபை என்பவற்றுக்கு அமைய சுகாதார அமைச்சின் கீழ் “தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்திற்கான தடுப்பு மருந்து வழங்கல் நிலையங்கள்” என பதிவு செய்யப்பட்டு, ஒப்புதல் பெற்று சுகாதார அமைச்சின் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகளின் தரங்களை பின்பற்ற வேண்டும்.

1.7 நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவையை நாடும் அனைத்து பிரஜைகளுக்கும் தரமான தடுப்பு மருந்து பாதுகாப்பாக வினைத்திறனான முறையில் வழங்கப்படுவதனூடாக நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்கப்பட வேண்டும்.

1.8 அனைத்து நோயெதிர்ப்பு சக்தியளித்தல் வழங்குநர்களும் தடுப்பு மருந்து வழங்குதல் வரையான போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலான அனைத்து வேளைகளிலும் குளிர்ச்சங்கிலியை பேண வேண்டும்.

1.9 அனைத்து பாவிக்கப்பட்ட மருந்துக்குப்பிகள், ஊசிகள் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியளித்தலின் போதான கழிவுகள் என்பன தேசிய சுற்றாடல் கொள்கைக்கு அமைவாக மருத்துவ கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான கொள்கைக்கு ஏற்ப கையாளப்பட வேண்டும்.

1.10 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட தரமான, பாதுகாப்பான நோயெதிர்ப்பு சக்தியளித்தலுக்கான விதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை சகல நோயெதிர்ப்பு சக்தியளிதல் சேவை வழங்குநர்களும் பின்பற்றுதல் வேண்டும்.

1.11 அனைத்து நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர்களும் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான தகவல்களை தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்துடன் பரிமாறிக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1.12 பாதிக்கப்படக்கூடியவர்களும், உயர் ஆபத்துப் பிரிவினரும் தடுப்பு மருந்துகளினால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்ப போதியளவு பாதுகாக்கப்பட வேண்டும்.

1.13 அனர்த்தங்கள், தொற்றுநோய் பரவல் போன்ற விசேட அவசர நிலைகளின்போது, தடுப்பு மருந்துகளினால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து போதிய பாதுகாப்பை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதி செய்ய தகுந்த நேரத்தில் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவையை வழங்குதல் வேண்டும்.

1.14 அனர்த்தம் அல்லது தீவிர நோய் பரவலின் போது, நன்கொடையாக கிடைக்கும் தடுப்பு மருந்துகள் அவசியமான தர உறுதிப்பாடு மற்றும் பதிவு நடைமுறைகள் ஊடாக செல்ல வேண்டும்.

1.15 நாட்டினது விசேட தேவை மற்றும் சர்வதேச கடப்பாடுகளுக்கமைய, எல்லை கடக்கும் குடிப்பெயர்வினர், இடம்பெயர்வோர் ஆகியோர் தடுப்பு மருந்துகளினால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து போதியளவு பாதுகாக்கப்பட வேண்டும்.

1.16 தொழில் தொடர்பான தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்களுக்கான அபாயம், பொருத்தமான நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகளை பொருத்தமான தொழில்சார் பிரிவினர்களுக்கு வழங்குவதன் மூலம் குறைக்கப்பட முடியும்.

1.17 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் பொருத்தமான பங்குதாரர்களுடன் சிறந்த ஒத்துழைப்பையும், ஒருங்கிணைப்பையும் பேண வேண்டும்.

1.18 அனைத்து நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர்களும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணியை நிறைவேற்ற தகுதியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

1.19 நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர்கள் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தினது வழிகாட்டுதல்களை பின்பற்றியிருப்பின், ஏற்படும் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு சட்டத்தின் முன் பொறுப்பில்லை.

1.20 அனைத்து தடுப்பு மருந்து பெறுநர்களும் விஞ்ஞான சான்றுகளுக்கு அமைவான தடுப்பு மருந்துகளை சரியான அளவில், அவர்களின் வயதுக்கேற்ப பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

1.21 தடுப்பு மருந்தின் பாதுகாப்பு மற்றும் திறன் தொடர்பான தகவல்கள் தடுப்பு மருந்து பெறுநருக்கு கிடைக்கப்பெறுவதை நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர் உறுதி செய்ய வேண்டும்.

1.22 தடுப்பு மருந்து பெறுநர் ஒருவர் நோயெதிர்ப்பு சக்தியளித்தலினால் நிரந்தர குறைபாடு அல்லது இறப்புக்கு ஆளானால், அது தொடர்பான நலன்புரி நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் பொறிமுறையை பின்பற்றி நடைபெற வேண்டும்.

1.23 ஆற்றலுள்ள, பாதுகாப்பான நோயெதிர்ப்பு சக்தியுள்ள பொருட்கள் (உதாரணம் : இமுனோகுளொபுயுலின்) , அவை சிகிச்சைக்காக தேவைப்படும் மருத்துவ நிலைமைகளின் போது கிடைப்பதை உறுதி செய்தல்.

***குறிக்கோள் 2: ஆற்றலுள்ள, பாதுகாப்பான தரமான தடுப்பு மருந்துகள் :***

நிலையான நியாயமான முறையில் மக்களின் சுகாதார தேவைக்கு அமைய ஆற்றலுள்ள, பாதுகாப்பான தடுப்பு மருந்துகளைப் பாவிப்பதை உறுதி செய்வதன் மூலம் பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள் இல்லாத நாட்டை உருவாக்கல்.

2.1 மக்களுக்கு ஆற்றலுள்ள, பாதுகாப்பான தரமான தடுப்பு மருந்துகள் கிடைக்கின்றமையானது நாட்டினது நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையினதும், இலவச சுகாதார சேவை கொள்கையினதும் அங்கமாகும்.

2.2 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தில் பயன்படுத்தப்படுகின்ற தடுப்பு மருந்துகள் செலவுக்கேற்ற பயனுள்ளவையாக இருத்தல் வேண்டும்.

2.3 மக்களுக்கு பரத்தளவிலான நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சந்தர்ப்பங்களை உறுதி செய்ய ஆற்றலுள்ள, பாதுகாப்பான, தரமான தடுப்பு மருந்துகள் மக்களுக்கு கிடைக்கக்கூடியவாறு தனியார் துறையில் இருத்தலை நாடு அங்கீகரிக்கின்றது.

2.4 தேசிய ஒழுங்குமுறை அதிகார சபையில் பதியப்படாத எந்த தடுப்பு மருந்தையும் நாட்டினனுள் பாவிக்க முடியாது.

2.5 எந்தவொரு தடுப்பு மருந்தினது பதிவும் மக்கள் மீதான சிறந்த அக்கறையின்பால் நடைபெறும். தனியார் அல்லது அரசாங்க துறையில் எந்தவொரு புதிய தடுப்பு மருந்தையும் பதிவு செய்தலானது தொற்று நோய்களுக்கான ஆலோசனை சபையின் பரிந்துரைகளுக்கமைய தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.6 சர்வதேச நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நன்கொடையாக அல்லது கொள்வனவு செய்து வழங்கப்படுகின்ற தடுப்பு மருந்துகளும் பதிவு செய்யப்படல் கட்டாயமானதாகும்.

2.7 அரசாங்கத்துறையில் பாவிக்கப்படும் தடுப்பு மருந்துகள் அவற்றின் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் தரம் தொடர்பாக கிடைக்கக்கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க கொள்முதல் நியம நடைமுறைகளை பின்பற்றும்.

2.8 தனியார் துறையில் உபயோகிக்கும் தடுப்பு மருந்துகள் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தகவல்களைக் கொண்ட தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

2.9 அனைத்து சேவை வழங்குநர்களும், தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்திலுள்ள அனைத்து தடுப்பு மருந்துகளும் தேசிய தொற்றுநோய்களுக்கான ஆலோசனை சபையினால் பரிந்துரைக்கப்பட்ட நோயெதிர்ப்பு சக்தியளித்தல் அட்டவணையை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

2.10 ஆற்றலுள்ள பாதுகாப்பான, தரமான தடுப்பு மருந்து பாவனையை உறுதி செய்ய அனைத்து அரச, தனியார் நிறுவனங்களும் இறக்குமதியிலிருந்து சேவை வழங்கல் நிலையம் வரை தடுப்பு மருந்துகளின் குளிர்சங்கிலியை பேண வேண்டும் என்பதுடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் சபையினாலும், நோயெதிர்ப்பு திட்ட முகாமைத்துவ நிறுவனத்தினாலும் கண்காணிக்கப்படுதலும் வேண்டும்.

2.11 நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர்கள் தடுப்பு மருந்து தொடர்பான அனுகூலம், அபாயம் பற்றிய தகவல்கள் பெறுநருக்கு கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும். இது தொடர்பிலான எந்தத் தகவலும் சுகாதார அமைச்சின் ஒத்திசைவுடனிருத்தல் வேண்டும்.

2.12 காலாவதியான மற்றும் சேதமான தடுப்பு மருந்துகள் அகற்றப்படல் நாட்டின் தேசிய சுற்றாடல் கொள்கை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டம் ஆகியவற்றிற்கு ஏற்புடைய மருத்துவ கழிவகற்றல் கொள்கையை பின்பற்ற வேண்டும்.

2.13 தடுப்பு மருந்துகளின் தரம், பாதுகாப்பு, ஆற்றல் என்பன தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் தேசிய கட்டுப்பாடு ஆய்வுகூடம் (மருத்துவ ஆராய்ச்சி நிலையம்) மற்றும் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்ட முகாமைத்துவ நிறுவனம் (தொற்றுநோயியல் பிரிவு) என்பவற்றின் கண்காணிப்பு, மேற்பார்வை, மற்றும் மதிப்பாய்வின் மூலம் பாதுகாக்கப்படும்.

**குறிக்கோள் 3 : புதிய தடுப்பு மருந்துகளை அறிமுகப்படுத்தல்**

அறிவார்ந்த சான்றுகளின் அடிப்படையில் புதிய தடுப்பு மருந்துகள் அறிமுகப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

3.1 நாட்டில் தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்களின் அறிவியல் தரவுகளின் அடிப்படையில், காலத்துக்குக் காலம் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

3.2 புதிய தடுப்பு மருந்துகளின் அறிமுகம் மற்றும் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் அட்டவணையில் மாற்றம் என்பன விஞ்ஞான தரவுகளின் அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டும்.

3.3 புதிய தடுப்பு மருந்துகளின் அறிமுகம் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் விஞ்ஞான பூர்வமான ஆய்வு முறைகள், சிறந்த மருத்துவ பயிற்சி நியமங்கள், நெறிமுறையியல் அனுமதி (சுகாதார அமைச்சின் நெறிமுறையியல் குழுக்கள் ஊடாக) மற்றும் பங்குதார்களுக்கு பொருத்தமான காலத்தில் ஆராய்ச்சி முடிவுகளின் வெளியீடு என்பவற்றை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். மேலும் சகல தடுப்பு மருந்துகள் தொடர்பான சிகிச்சையியல் ஆய்வுகளுக்கும் அழகுப் பொருட்கள், சாதனங்கள், மற்றும் ஔடதங்கள் அதிகார சபை - தேசிய ஒழுங்குமுறை அதிகாரசபையின் அனுமதி தேவை.

3.4 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தில், தடுப்பு மருந்துகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முக்கிய அங்கமாக அங்கீகரிக்கப்படும்.

3.5 தடுப்பு மருந்துகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஒரு பகுதியாக, உள்ளூரில் ஆற்றலுள்ள, பாதுகாப்பான தடுப்பு மருந்துகள் தரத்தில் மாறுதல் இல்லாமல் தயாரிக்கப்படும் சாதியக்கூறுகள் ஆராயப்படும்.

**குறிக்கோள் 4 : தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை அமுல்படுத்தல்**

அனைத்து சேவை வழங்குநர்களும் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை அமுல்படுத்துவதை நோயெதிர்ப்பு சக்தியளித்தல் துறையில் கண்காணிப்பு மதிப்பாய்வு, தகவல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி என்பவற்றின் மூலம் உறுதி செய்தல்.

4.1 சகல நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவை வழங்குநர்களும் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை பயனுள்ள வகையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வுக்கு உள்ளாக்க தேவையான தகவல்களை வழங்க வேண்டும்.

4. 2 தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான பாதகமான விளைவுகள் மற்றும் சந்தேகப்படக்கூடிய தடுப்பு மருந்துகளால் தடுக்கக்கூடிய நோய்கள் என்பவற்றுடன் காணப்படும் நோயாளர்களை கவனிக்கும் அனைத்து சுகாதார சேவை வழங்குநர்களும், அவற்றை தேசிய நோய்க்கண்காணிப்பு பொறிமுறையூடாக நோயெதிர்ப்பு சத்தியளித்தல் நிகழ்ச்சிக்கு வழிகாட்டுதல்களுக்கமைய அறிவிக்க வேண்டும்.

4.3 அறிவிக்கப்படும் சகல தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான மிகப் பாதகமான விளைவுகளை நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நிகழ்ச்சி விசாரணை செய்யும். மேலும் இது, தேசிய நோய்க்கண்காணிப்பு பொறிமுறைக்கூடாக கிடைக்கும் மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்ட தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்களை ஆராயுவும் நடவடிக்கைகளை எடுக்கும்.

4.4 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நடவடிக்கைகளை தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் கண்காணிப்பதுடன் மதிப்பாய்வும் செய்யும்.

4.5 தனிநபர் அல்லது குழுக்கள் அல்லது சேவை வழங்குநர்களை பாதிக்கக்கூடிய சகல நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான தகவல்களினதும் இரகசியத்தன்மை எல்லா நிலைகளிலும் பேணப்படுதல் உறுதி செய்யப்படும்.

4.6 அனைத்து நோயெதிர்ப்பு சக்தியளித்தலுடன் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளும் விஞ்ஞானமுறையியல், நியம நெறிமுறையியல் (சுகாதார அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட நெறிமுறையியல் குழுக்கள்) என்பவற்றுக்கு ஏற்ப இருப்பதுடன், பொருத்தமான காலத்தில் பங்குதார்களுக்கு ஆய்வு முடிவுகளை வெளியிடுவதாகவும் இருத்தல் வேண்டும்.

4.7 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது விஞ்ஞான ஆராய்ச்சி முடிவு, தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான பாதகமான நிகழ்வுகள் தொடர்பான கண்காணிப்பு தரவுகள், உரிமத்திற்கு பின்னரான தரவுகள், தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள் பற்றிய கண்காணிப்பு தரவுகள் என்பன பகிரப்படவும், பயன்படுத்தப்படவும் வேண்டும்.

**குறிக்கோள் 5 : நிதி தொடர்பான நிலைத்து நிற்கும் தன்மை**

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் நிதி தொடர்பான நிலைத்து நிற்றலை உறுதி செய்தல்.

5.1 இலங்கை அரசாங்கம் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் நிதி தொடர்பான நிலைத்திருக்கும் தன்மையை பேணுவதற்கு உறுதி பூண்டுள்ளது. அரசு உரிய காலத்தில் தரமான தடுப்பு மருந்துகளையும், ஏனைய துணை ஏற்பாடுகளையும் கொள்வனவு மற்றும் விநியோகம் செய்வதற்கு போதியளவு நிதியை வழங்கும்.

5.2 நிதி தொடர்பான நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்வதற்கு, தேசிய வரவு செலவு திட்டத்திற்குள் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நிகழ்ச்சிக்கான தனியான வரவு செலவு வரைவை அரசாங்கம் உறுதி செய்யும். இவ்வரவு செலவு வரைவு, நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும்.

5.3 மாகாண மட்டத்தில் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் சேவைகள் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் குறிக்கோள்களுக்கு அமைய சுமூகமாக செயற்பட தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்கள் உரிய நேரத்தில் கிடைப்பதை சகல மாகாண அதிகாரங்களும் உறுதி செய்யும்.

5.4 திட்டத்தின் குறிக்கோள் மற்றும் முழுமையை பேணி, தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை வலுப்படுத்த தேவையான நன்கொடைகளை பெறுவதன் சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஆராயும்.

5.5 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் நிதி தொடர்பான நிலைத்திருக்கும் தன்மையை ஒழுங்காக கண்காணிக்க பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும்.

**குறிக்கோள் 6 : கருத்துக்கோடலும் ஊக்குவிப்பும்**

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்திற்கான கருத்துக்கோடல், ஊக்குவிப்பு, விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் ஆதரவு என்பவற்றை உறுதி செய்தல்.

6.1 தடுப்பு மருந்து நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான தகவல் பெறும் பொதுமக்களின் உரிமை அங்கீகரிக்கப்படுகின்றது.

6.2 பொருத்தமான வயதில் நோயெதிர்ப்பு சக்தி பெறுவதின் முக்கியத்துவம், அனுகூலங்கள் மற்றும் அவசியம் தொடர்பான உயர் சமூக விழிப்புணர்வு ஊக்கிவிக்கப்படும்.

6.3 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தை ஊக்குவித்து, பாதுகாத்து ஆதரவளித்தலில் எல்லா சுகாதாரப் பராமரிப்பு முறைகளும் (பொது மற்றும் தனியார், மேற்கத்தேய மற்றும் வேறு) ஈடுபட வேண்டும்.

6.4 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நடவடிக்கைகளின் ஊக்குவிப்பு தொடர்பாக அனைத்து சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர்களினதும் திறன் விருத்தி செய்தல் ஊக்குவிக்கப்படும்.

6.5 சுகாதாரதுறையினரால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தினை ஊக்குவித்தல் பாதுகாத்தல் மற்றும் ஆதரவளிதல் தொடர்பில் கல்வித்துறை, ஊடக நிறுவனங்கள், சமூக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அபிவிருத்திப்பங்காளிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட அமைப்புகள் என்பவற்றால் ஆற்றப்படும் முக்கிய பாத்திரத்தை அரசாங்கம் அங்கீகரிக்கின்றது.

6.6 முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகள் (பொது மற்றும் தனியார்) உள்ளிட்ட சகல கல்விசார் அமைப்புகளும் தேசிய நோயெதிரப்பு சக்தியளித்தல் திட்ட நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பும், ஆதரவும் அளிக்கும் பாடசாலை அனுமதியின் போது சிறுவர்களின் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நிலை மதிப்பிடப்படும்.

6.7 மக்களுக்கு பயனளிக்கும் வகையில் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான அனைத்து அம்சங்களையும் உரிய காலத்தில் அறிவுக்கு ஏற்புடையதாகவும், பொறுப்புடனும் அறிக்கையிடுதலை ஊக்குவிப்பதற்காக ஊடக அமைப்புகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை பேண வேண்டும்.

6.8 தடுப்பு மருந்து விற்பனையாளர்கள் தடுப்பு மருந்து விற்பனை மற்றும் தடுப்பு மருந்து வழங்கும் சேவைகளை ஊக்குவிக்கும் போது தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் திட்டத்தின் பாதுகாப்பையும் ஆதரவளித்தலையும் உறுதி செய்யும் வகையில் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் நீதிநெறி முறைகளை பின்பற்ற வேண்டும்.

**குறிக்கோள் 7 : தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை அமுல்படுத்தல்**

தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை அமுல்படுத்துவதானது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகும். இதற்கான பொறுப்பு அனைத்து தொடர்புபட்ட பங்குதார்களுக்கும் உரியது.

7.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய சுகாதாரக் கொள்கையின் இலக்கு, குறிக்கோள் மற்றும் கட்டமைப்பிற்கு அமைய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கை அமுல்படுத்தப்படும்.

7.2 நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் அமுலாக்கம் ஒரு மூலோபாய, திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படும்.

7.3 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கை பாராளுமன்ற சட்டமூலம் ஊடாக பலப்படுத்தப்படும்.

7.4 சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் அமுலாக்கம், கண்காணிப்பு, மதிப்பாய்வு என்பவற்றுக்கு தகைமைசார் அதிகாரமுடையவராவார். நோயெதிர்ப்பு சக்தயளித்தல் கோள்கையின் அமுலாக்கல் தொடர்பாக தொற்றுநோய் தொடர்பான ஆலோசனை குழுவிடமிருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆலோசனையையும், நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்வார்.

7.5 மாகாண அதிகார அமைப்புகள், சம்பந்தப்பட்ட மாகாணங்களின் நோயெதிர்ப்பு சக்தியளித்தல் நடவடிக்கைகளின் போது தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை பின்பற்ற வேண்டும்.

7.6 தடுப்பு மருந்துகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைகள், தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையை பின்பற்ற வேண்டும்.

7.7 தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையும், உபாயத்திட்டமும் தேசிய மற்றும் மாகாண அதிகார அமைப்புகளால் அமுல்படுத்தப்படும். மேலும் கொள்கை அமுலாக்கமானது அரசாங்க அமைச்சுகள். பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் என்பவற்றின் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டுமுயற்சி மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

7.8 நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் அமுலாக்கமானது பயனுறுதியுள்ள கண்காணிப்பு பொறிமுறையினூடாக ஒழுங்காக கண்காணிப்பும், மதிப்பாய்வும் செய்யப்படும். நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் கண்காணிப்பு குறிகாட்டிகள் விருத்தி செய்யப்பட்டு அமுலாக்கலின் முன்னேற்றம் ஏற்ற முறையில் கண்காணிக்கப்படும்.

7.9 நாட்டின் தேவைக்கு ஏற்ப தேசிய நோயெதிர்ப்பு சக்தியளித்தல் கொள்கை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும்.

1- 526

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.